2019 பிப்ரவரி 11]

நிறுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால், எந்த இடத்தில் என்று புகார் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

48—

கால்நடை கிளை நிலையம்

***38442—திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்**:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திமிரி ஒன்றியம், வேம்பி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வேம்பி ஊராட்சியில் சுமார் 2,656 மாட்டினங்கள், சுமார் 3,240 ஆட்டினங்கள் மற்றும் சுமார் 4,000 கோழியினங்களுடன் சேர்த்து சுமார் 3,020 கால்நடை அலகுகள் உள்ளன. இதில் கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்குத் தேவையான 3,000-க்கு அதிகமான கால்நடை அலகுகள் இருப்பதால், அங்கே கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய வேம்பி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.*

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். பெண்ணகர், அத்தியானம், கோடாலி, பாலி, மேல்குறிஞ்சி பகுதிகளுக்கு வேம்பி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைத்தால் மிகவும் பயனுடையதாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் தொகுதி மக்களின் சார்பாக அதை வரவேற்கிறேன்.

மேலும், ஆற்காடு தொகுதி கிராமங்கள் நிறைந்த பகுதி. கிட்டத்தட்ட 90 சதவிகிதம் மக்கள் விவசாயம் மற்றும் கால்நடைகளை தங்களுடைய வாழ்வாதாரமாக நம்பித்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, எசையனூர், மேலப்புதூர், வெல்லண்டி, கம்மாம்பேட்டை, மேட்டுப்பாளையம், கத்தாளம்பட்டு, மஞ்சுண்டாபுரம், மேலப்பலந்தை, மூங்கில்பட்டு, கனியனூர், வெங்கடாபுரம், வளையாத்தூர் போன்ற பகுதிகளில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், பையனூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கான அரசாணை (நிலை) எண் 9, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 23-1-2018 அன்று வெளியிடப்பட்டு, 29-3-2018 முதல் கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு இடங்களில் கால்நடை கிளை நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 6 மாநகராட்சிகளில் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய பன்முக மருத்துவமனைகளும், 5 மருந்தகங்கள் மருத்துவமனைகளாகவும், 100 கால்நடை கிளை நிலையங்கள் மருந்தகங்களாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், எப்போதும் இல்லாத வகையிலே

2019 பிப்ரவரி 11]

இந்த ஆண்டு 125 கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன என்பதையும் பெருமையோடு இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதிகளுக்கு கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு நடத்தி, தேவைப்படுமாயின் கால்நடை கிளை நிலையங்கள் அமைப்பதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.*

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யப்படும் என்று சொன்னார்கள். அதேபோல ஆற்காடு நகராட்சி, கிட்டத்தட்ட 55 ஆயிரம் மக்கள்தொகை கொண்டது. ஒட்டுமொத்தமாக அனைத்து கிராமங்களிலும் பார்த்தால் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. ஆகவே, ஆற்காடு நகராட்சியில் பகுதிநேர கால்நடை கிளை நிலையமோ அல்லது கால்நடை மருத்துவமனையோ அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆற்காடு நகராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். உடனடியாக கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகளை அனுப்பி வைத்து, தேவைப்படுமாயின் அதுகுறித்து ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*